மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண். 236/2019

**2024–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27–ம் நாள் வெள்ளிக் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **செல்வி.S. இவாஞ்சலின், இளநிலை உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணமூர்த்தி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : நடேசபடையாச்சி | வட்டம் | : வேப்பந்தட்டை |
| கிராமம் | : வி.களத்தூர் | வயது | : 71/2024 |

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

(i) எனது தந்தை ராணுவத்தில் இருந்தார் என்பதற்கு அடையாள அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், முன்னாள் ராணுவ வீரர்கள் அரசு புறம்போக்கு நிலங்களை அனுபவம் செய்து பட்டா செய்து கொள்ளலாம் என்ற அரசாணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், எனது தந்தை பெயருக்கு தாவா சொத்தை அரசாங்கம் ஒப்படைவு செய்யப்பட்டது என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், அவ்வாறு தாக்கல் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் அனுபவிக்கிறேன் என்பதற்கு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் வாய்தா ரசீதை தாக்கல் செய்துள்ளேன். VAO சான்று தாக்கல் செய்துள்ளேன். எந்த சொத்திற்கு வாய்தா ரசீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு சொத்திற்கு தான் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கான பட்டா எண் தெரியுமா என்றால் யூடிஆர்க்கு பின்னிட்டு மாற்றப்பட்டது பட்டா எண்.1343 ஆகும்.

(ii) வா.சா.ஆ.13 ஆவணங்களை அனைத்தும் ராயமுத்து பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது தவறாக யூடிஆரின் போது கொடுக்கப்பட்டது. தாவா சொத்திற்கு எனது பெயரில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது பெயரில் தாவா சொத்து உள்ளதற்கு என்பதை எந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்பதால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு எனது பெயரில் அடங்கல் பதிவேடு தாக்கல் செய்யவில்லை என்றால் VAO சான்று தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை உண்மையில் நான் அனுபவம் செய்திருந்தால் என் பெயரில் அடங்கல் உட்பட இதர வருவாய் ஆவணங்களை தாக்கல்

செய்திருப்பேன் என்றால் அவ்வாறு தாக்கல் செய்யாததால் உண்மையில் தாவா சொத்தை நான் அனுபவம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

(iii) தாவா சொத்தில் 2 ஏக்கர் 26 செண்ட்டை மாரிமுத்து மற்றும் மூக்கபிள்ளை ஆகியோர் 1.13 செண்ட் என்று வாய்மொழியாக பாகம் பிரித்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு எந்த பாகமும் வாய்மொழியாக பிரித்து கொள்ளவில்லை. தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்கள் ஏதும் எனக்கு இல்லையா என்றால் வேறு சொத்துக்கள் உள்ளன. எனது மாமியார் வீட்டில் எனக்கு வாங்கி கொடுத்த சொத்துக்கள் உள்ளன. எந்த வருடம் வாங்கி கொடுத்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. எனது மனைவி பெயர் ராணி. எனது மனைவி பெயரில் உள்ள நிலம் அரசு புறம்போக்கு நிலத்தில் எனது மனைவி பெயரில் பட்டாவாக ஏற்படுத்திக்கொண்ட நிலம் என்றால் சரியல்ல. எத்தனை ஏக்கர் நிலம் எனது மனைவி பெயரில் உள்ளது என்றால் 3 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த நிலத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

(iv) தாவா சொத்தை பொருத்து எனது பெயரில் பட்டா வேண்டி வருவாய் துறை அதிகாரிகளிடம் மனு கொடுத்து விசாரணைக்கு பின்னிட்டு தாவா சொத்து எனக்கு சொந்தமானது அல்ல என்று மனு தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றாலும் மேல்முறையீட்டிலும் தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்பட்ட பின்னர் தாவா சொத்தை பொருத்து விளம்புகை பரிகாரம் கோராமல் வெறுமனே நிர்ந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளதால் தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் இடைக்காலமாக எந்த உத்தரவும் பிறப்பிக்கமுடியாது என்றும், வழக்கின் இறதியில் மட்டுமே உத்தரவு பிறப்பிக்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி ஆவணம் எனது தரப்பு வழக்கை நிரூபிக்க எந்த வகையிலும் எனக்கு பயன்படாது என்று சொன்னால் சரியல்ல.

v) வா.சா.ஆ.5 ஆவணம் தாவா சொத்திற்கு சம்மந்தப்பட்ட ஆவணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6, வா.சா.ஆ.14 ஆவணத்தில் எனது தந்தை முன்னாள் ராணுவ வீரர் என்பதால் நான் கொடுத்த மனுவிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று நான் பரிந்துரைத்த கடிதம் மட்டுமே என்றாலும் அதை வைத்து நான்

உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை நானும் எனது குடும்பத்தாரும் ஒருபோதும் அனுப்பவித்தது அல்ல என்றாலும், அனுபவிப்பதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ராணுவத்தில் பணிபுரிவதாலேயே அரசு சொத்தை பட்டா பெற்று கொள்ளலாம் என்ற விதிகளோ, உத்தரவுகளோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை எந்தெந்த போரில் ராணுவ வீரராக பணிபுரிந்தார் என்ற விவரங்களை பெற்று ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தை ராணுவத்தில் எந்த பணிநிலையில் பணி புரிந்தார் என்று வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து மூக்கபிள்ளை மற்றும் மாரிமுத்துவிற்கு பாத்தியப்பட்டு அவரிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரையம் பெற்று நாளது தேதிவரை அனுபவம் செய்து வருகிறார் என்றாலும், எனக்கும் தாவா சொத்திற்கும் ஒரு காலத்திலும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

vi) எனது தந்தை உயிருடன் இருந்த காலம் வரை அரசு சொத்தை தன் பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய கோரி எவ்வித மனுவும் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அப்போது யாரும் இடையூறு செய்யவில்லை. உண்மையில் எனது தந்தை தாவா சொத்தை அனுபவம் செய்திருந்தால் பட்டா வேண்டி மனு கொடுத்திருப்பார் என்றாலும் அவ்வாறு இல்லாததால் தான் மனு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்து அரசாங்கத்திற்கு பாத்தியபட்ட சொத்து இல்லை என்றாலும் தனிநபருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் சரியல்ல. அரசாங்க நிலத்தை பட்டா ஏற்படுத்திக்கொண்ட நான் தாவா சொத்திற்கு பட்டா ஏற்படுத்திக்கொள்ள தீய எண்ணம் கொண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு 3 குழந்தைகள் இரண்டு பெண் பிள்ளைகள் மற்றும் நான், பெண் பிள்ளைகளை கட்டிக்கொடுத்து விட்டோம். தாவா சொத்து எங்களுக்கு பாத்தியபட்டது இல்லை என்பதால் தான் எனது உடன்பிறந்த சகோதரிகள் தாவா சொத்தை குறித்து வழக்காடவில்லை என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**